சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 24.03.2026
பி.வா.சா.1 – தாமரைச்செல்வி W/o ஹரிஹரமுருகன்
O.S. No.186/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் பிளஸ்டு வரை படித்துள்ளேன். நான் மாங்குளம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விற்பனையாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2012ம் ஆண்டு முதல் மேற்படி சங்கத்தில் வேலை செய்து வருகிறேன். நான் மாங்குளம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வேலை செய்வதற்கு ஆதரவாக அடையாள அட்டையை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் மாங்குளத்தில் தங்கியிருக்கும் முகவரி தொடர்பாக நான் பணியாற்றும், மாங்குளம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அதில் தெரிவித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை, ஆதார் மற்றும் ரேஷன் கார்டு ஆகியவற்றை தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரை, நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எல்லாம் யார் சொல்லி நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அது உண்மையான நிலவரம் என்பதால் நான் தான் கூறினேன். நான் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் ஆவணங்களை எல்லாம் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் தாக்கல் செய்திருக்கும் பி.சா.ஆ.9 சொத்து வரி ரசீதில் சொல்லப்பட்டிருக்கும் விலாசத்திற்குரியது தான பி.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்களா என்றால் ஆமாம். பி.சா.ஆ.9 ஆவணமானது எந்த வார்டுக்குரிய ஆவணம் என்றால் வார்டு எண்.6 ஆகும். வழக்கு 1ம் இன சொத்து 6வது வார்டில் தான் உள்ளது. தாவா 1ம் இன சொத்து 2வது வார்டில்

உள்ளது என்றும் 6வது வார்டில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு 1ம் இன சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். வாதி பெயரில் தான் வழக்கு 1ம் இன சொத்து வரி ரசீதுகள் எல்லாம் வருகிறது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.9 ஆவணம் என்னுடைய பெயரில் தான் வந்துள்ளது. பொதுவாக சொத்தின் உரிமையாளர் பெயரில் தான் ரசீது வழங்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். அதனால் தான் என் பெயரில் ரசீது வழங்கப்பட்டுள்ளது. பி.சா.ஆ.9 ஆவணமானது என்னுடைய வேறு சொத்துக்குரிய வரிரசீது என்றும் அது வழக்கு சொத்துக்குரியது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு மாங்குளம் கிராமத்தில் வேறு ஏதேனும் சொத்துக்கள் இருக்கிறதா என்றால் எனக்கு வேறு சொத்துக்கள் இல்லை. எனக்கு வீடு நிலங்கள் எல்லாம் மாங்குளம் கிராமத்தில் உள்ளதுஎன்றும் அதை மறைத்து வேறு சொத்துக்கள் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் வேறு சொர்துதுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்என்றும் அது வழக்கு சொத்துக்குரிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை எனக்குஅனுப்பியிருக்கிறார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பும் நான் அனுப்பியிருக்கிறேன். மேற்படி பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. அவ்வாறுபதில் அறிவிப்பை நான் அனுப்பவில்லை என்றும் அதனால் தான் தெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு வந்தவுடன் சொத்தை எனது பெயரில் பதிந்து கொடுக்கவேண்டும் என்று வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நான் 1998ம் ஆண்டு முதலே என் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. ஒரு சொத்து காலியிடமாகும், சுமார் 5 செண்டு ஆகும்.

மற்றொன்று வீடு அதுவும் 5 செண்டில்இருக்கிறது. வழக்கு சொத்துக்குரிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் கூட்டுறவு சங்கத்தில் உதவி செயலாளராக மாங்குளத்தில் இருந்தார். என் கணவர் ஹரிஹரமுருகனின் பெயரில் தனிப்பட்ட சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இல்லை. எனது கணவர் பணியில் இருக்கும் போதே 2009ம் ஆண்டு காலமாகிவிட்டார். எனக்கு வழக்கு சொத்தில் உரிமை இருக்கிறது என்பதை நிருபிக்க பத்திரமோ, பட்டாவோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர், வாதியின் கணவருக்கு 2-3 முறை 10 லட்சம் வரை கடனாக கொடுத்திருந்தார். முதல் முறை கொடுத்த 3 லட்சம் ரூபாய் எனக்கு நேரடியாக தெரியும், மற்றவை எனக்கு தெரியாது. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கிறார். என் கணவர் வாதியின் கணவருக்கு பணம் கொடுத்ததற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணமோ, ரசீதோ தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நட்பின் அடிப்படையில் அவர் கொடுத்திருந்தார். வாதியின் கணவர் என் கணவரிடம் எவ்வித கடனும் வாங்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக வாங்கியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் 1998 முதல் தொடர்ந்து வசித்து வருகிறேன் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் போன்பில் இருக்கிறது. பி.சா.ஆ.5 போன்பில் மகிழ்ச்சி தெரு, மகிழ்ச்சி இல்லம், மாங்குளத்தில் உள்ள வீட்டிற்கான போன் இணைப்பு சம்பந்தப்பட்டது என்றால் மகிழ்ச்சி இல்லம் என்று என் கணவர் வைத்த பெயர் தான் வழக்கு சொத்திற்கான வீட்டிற்கான பெயர்ஆகும். அவ்வாறு மகிழ்ச்சி இல்லம் என்று வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு பெயர் வைத்துள்ளதாக எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.5 ஆவணம் எந்த ஆண்டுக்குரிய ஆவணம் என்றால் 2003ம் ஆண்டுக்குரியது. வழக்கு சொத்து எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதற்கு

ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தான் பேசிகொள்ளப்பட்டது. வழக்கு சொத்திற்கான வரிவிதிப்பு எண்.116 என்றும் ஆனால் நான் தாக்கல் செய்திருக்கும் பி.சா.ஆ.9ல் வரிவிதிப்பு எண்.124 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1998முதல் வழக்கு சொத்து வீட்டில் வசித்து வந்ததற்கு ஆதாரமாக வீட்டு வரி ரசீதுகள், தண்ணீர்வரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் ஆகியன தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மேற்படி ரசீதுகள் எல்லாம் அங்கயற்கண்ணி அம்மாள் பெயரில் தான் வருகிறது. 1998ம் ஆண்டு முதல் வழக்கு சொத்தில் நாங்கள் இருந்தது கிடையாது என்பதால் தான் அந்த ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் எந்த ஆவணங்களும் 1998ம் ஆண்டு முதல் அனுபவத்தில் இருப்பதை குறித்து தாக்கல் செய்யவில்லை என்றம் வழக்கிற்காக நான் குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் இருக்கிறது என்று தெரியுமா என்றால் ஒரு காலியிடம், ஒரு வீடு மற்றொரு சின்ன காலியிடம் இருக்கிறது. மேற்படி சொத்துக்களில் எந்த சொத்து வாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றோ, எந்த சொத்து வாதியின் தாயாரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றோ சொல்லமுடியுமா என்றால் தெரியவில்லை. வாதியின் தாயார் நாகூர்அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து இருக்கிறது என்றால் சரிதான். நாகூர் அம்மாள் எப்போது காலமானார் என்று எனக்கு தெரியாது. நாகூர் அம்மாள் காலத்திற்கு பிறகு வழக்கு சொத்துக்களில் சில வாதிக்கும் அவரது தந்தைக்கும் வாரிசுரிமை அடிப்படையில் கிடைத்தது என்றால் அது பற்றி தெரியவில்லை. ஆனால் நாங்கள் வாதி சாயிரா பானுவிடம் இருந்து தான் வாங்கினோம். வழக்கு சொத்து வாதி பெயரிலும், அவரது தந்தை பெயரிலும்

இருப்பதால் அதை பொறுத்து வாதி மட்டும் எனக்கு விற்பனை செய்து கொடுப்பதற்கான உரிமையை முடிவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. நான் வாதியிடமோ, அவரது கணவரிடமோ எந்த காலத்திலும் கிரைய ஒப்பந்தத்தை நான் போட்டதில்லை என்றால் சரியல்ல. போட்டிருக்கிறோம். மேற்படி கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் சொத்தை பதிந்து கொடுக்கவேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை, வாய்மொழியாக தான் கேட்டோம். வழக்கு சொத்துக்கள் எனக்கு தான் பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனது மாமியார் பெயர் ஒய்யம்மாள். எனது மாமியார் தொழுநோய் பாதித்தவர் என்றால் சரிதான். நான் என் மாமியாரை தொழுநோயாளி என்பதால் அவரை வீட்டோடு சேர்க்காத காரணத்தினால் மனிதபிமான அடிப்படையில் என் மாமியாரை, வாதி 1ம் இன சொத்தில் அனுமதியின் பேரில் தங்க வைத்தார் என்றால் சரியல்ல. என் மாமியார் ஒய்யம்மாள் 2001வாக்கில் இறந்தார். என் மாமியார் என்னுடன் சேர்ந்து வசிக்கவில்லை என்பதால் தான் அவர் இறந்த வருடத்தை கூட தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அவர் தனியாக வீட்டின் ஒரு பக்கத்தில் இருந்தார். நான் தனியாக வீட்டின் ஒரு பக்கத்தில் இருந்தேன். வழக்கு 1ம் இன சொத்தை பொறுத்து உடல்நிலை சரியில்லாமல் இருந்த காலத்தில் வாதியிடம், ஒய்யம்மாள் சொத்தை சுவாதீனம் எடுத்து கொள்ளும்படி அவரே கூறிவிட்டார் என்றால் சரியல்ல. வாதியும் அவரது கணவரும் வெளிநாட்டில் இருந்த காரணத்தினாலும், கொரானா காலகட்டமாக இருந்தததால் வாதியால் உடனடியாக இந்தியா வந்து தாவா 1ம் இன சொத்தின் சுவாதினத்தை பெறமுடியவில்லை என்றால் சரியல்ல. என் மாமியார் இறந்தவுடனேயே தாவா 1ம் இன சொத்தோடு, அருகில் இருக்கும் 2, 3 இன சொத்துக்களையும் நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டு முதலே நான்

ஆக்கிரமிப்பை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல, நான் 1998ம் ஆண்டே வழக்கு சொத்தை விலை கொடுத்து கிரையம் பெற்றுவிட்டேன். வாதி வெளிநாட்டில் இருந்து வந்தவுடனே எனக்கு எதிராக மேலூர் காவல்நிலையத்திலும், காவல்துறை கண்காணிப்பாளர் மதுரை அவர்களிடமும் எனக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் விசாரணைக்கு நான் சென்றிருந்தேன். அவ்வாறு சொத்துக்கள் வாதியுடையது என்றும் நான் அவரிடம் ஒப்படைக்கவேண்டும்என்றும் காவல்நிலையத்தார் என்னிடம் எச்சரித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு காவல்துறையினர் என்னை எச்சரிக்கவே நான் மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்று மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எ ன்னை அடிக்கடி தொந்தரவு செய்தததால் தாக்கல் செய்தேன். என்னை காவலர்கள் தொந்தரவு எதுவும் செய்யவில்லை என்றம் எனக்கு எதிராக வாதி வழக்கு செய்யக்கூடாது என்பதற்காக தான் வழக்கை மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு பட்டா வழங்கக்கோரி வருவாய்துறை அலுவலர்களிடம் மனு தாக்கல் செய்திருந்தேனா என்றால் கொடுத்திருந்தேன் வழங்கக்கூடாது என்று அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துவிட்டார்கள். என் பெயருக்-கு பட்டா வழங்கவேண்டும்என்று அறிவுறுத்தி வருவாய்துறையினரையும் சேர்த்து மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனுவை நான் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி ரிட் மனு எண்.WP(MD) No.11067/2023 என்றால் சரிதான். மேற்படி வழக்கை 25.07.2025ம் தேதி நான் வாபஸ் பெற்று கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு சாட்சியிடம் காட்டப்பட்டு சாட்சி

அதை பார்வையிட்டு அது பற்றி தெரியவில்லை என்று கூறுகிறார். மேற்படி ரிட் மனுவில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டுது என்றும் அதில் எனக்கு பட்டா வழங்க இயலாது என்றும் ரிட் மனுவின் 3ம் எதிர்மனுதாரரான மாங்குளம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் தன்னுடைய ஆட்சேபணையை தாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி அறிக்கையானது எனக்கு விரோதமாக இருக்கிறது என்பதால் தான் நானே வழக்கை வாபஸ் பெற்று கொண்டேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனுதாக்கல் செய்த விபரத்தை அதை நாங்கள் வாபஸ் பெற்று கொண்ட விபரத்தையும் எங்களுக்கு பாதகமாக அது அமையும் என்பதால் வேண்டுமென்றே இந்த வழக்கில் அதை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2-3 முறை வாதியின் கணவர், எனது கணவர் பணம் கொடுத்ததை நிருபிப்பதற்கு ரசீது இருக்கிறதா என்றால் இல்லை. நட்பின் அடிப்படையில் கொடுத்தார். வாதியின் கணவரும் எனது கணவரும் நண்பர்களே அல்ல என்றால் சரியல்ல. நண்பர்கள் தான். எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட காலகட்டத்தில் வாதியின் கணவர் வெளிநாட்டில் வேலையில் இருந்தார் என்றால் சரியல்ல. இந்தியாவில் இருக்கும் போது தான் அவர் நண்பராக இருந்தார். அவ்வாறு வாதி பணத்தை பெற்ற கொண்டு கிரையம் முடித்து கொடுக்காமல் இருந்தார் என்பதால் பணத்தை திரும்ப கேட்டு, வழக்கறிஞர் அறிவிப்போ, புகாரோ கொடுத்திருந்தேனா என்றால் இல்லை. நான் பணத்தை திரும்ப கேட்கவில்லை, சொத்தை பதிந்து கொடுக்கும்படி தான் கேட்டேன். நான் வாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. சித்ரா என்பவர் என் எதிர்வழக்குரையில் என்னுடைய சகோதரி என்றும், நிருபண வாக்குமூலத்தில் எனது நாத்தனார் என்றும் நான் கூறியிருக்கிறேன் என்றால் சித்ரா என்பவர்

எனது சகோதரி. என் பிள்ளைகளை இநத் வழக்கில் சாட்சியாக விசாரித்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் அப்போதுள ன் மகள்களுக்கு சிறிய வயது என் கணவர் இறக்கும் போது என் மூத்தமகளுக்கு 11 வயது தான். அதனால் தெரியாது. எனது மூத்த மகளுக்கு தற்போது 28 வயது. இளையமகளுக்கு 25 வயது. என் மகனுக்கு தற்போது 20வயது. மேற்படி குழந்தைகளை விசாரித்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அவர்களுக்கு பணம் கொடுத்தது தெரியாது. உண்மை தன்மை தெரியவரும் என்பதால் என் குழந்தைகளுக்கு விபரம் தெரியாது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை எனக்கோ, என் கணவருக்கோ, வாதியோ, வாதியின் கணவரோ எந்த காலத்தில் கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புகொள்ளவும் இல்லை, பணம் பெற்று கொள்ளவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சுவாதினம் என்னிடம் எப்போது கொடுத்தது கிடையாது என்றும் என் மாமியார் அனுமதியின் பேரில் வழக்கு சொத்தின் ஒருபகுதியில் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டார் என்றும் பின்னர் சொத்தை வாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும் அதை நான் வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு 1ம் இன சொத்து என்பது குடியிருக்கும்வீடு என்றால் சரிதான். வழக்கு 1ம் இன சொத்தை வாதி வாடகைக்கு வேறொருவருக்கு விட்டிருந்தால் அவர் அதில் இருந்து வாடகையை பெற்று வந்திருபபார் என்றும் நான் அதை தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு புறம்பாக வழக்கு 1ம் இன சொத்தை ஆக்கிரமிப்பு செய்திருப்பதால் ஒவ்வொரு மாதமும் 10000ரூபாய் வாதிக்கு நான் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம்கொடுத்திருக்கிறேன். வழக்கு 2 மற்றும் 3ம் இன சொத்தை பொறுத்து

நான் சேதப்படுத்திவிட்டேன் என்றும் அதற்கும் நான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் வழக்கு சொத்தின் அசல் ஆவணங்களை எனது கணவரிடம் ஒப்படைத்ததற்கு கூறுவதற்கு ஆதாரமாக ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அவை எங்கிருக்கிறது என்பது எனக்கு தெரியவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. எங்களிடம் வாதி தரப்பில் அவை ஒப்படைக்கப்படவில்லை என்பதால் தான் அவை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் விபத்தில் காலமாகிவிட்டார். அதனால் அது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்களும் வழக்கு சொத்துக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு வாதி கோரியுள்ளபடி அவருக்கு சாதகமாக தீர்ப்பாகவேண்டியது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.24 20:07:46 +0530

Sub Judge

Melur